செய்தி வெளியீடு எண்: 677 நாள் : 16.12.2015

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பருவமழையின் போது குடும்ப அட்டைகளை இழந்தவர்களுக்கு, இன்று (16.12.15) சென்னை ஆயிரம்விளக்கு மற்றும் தியாகராயநகர் பகுதி குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மண்டல அலுவலகத்தில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.பா.வளர்மதி அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு, இந்து சமயம் (ம) அறநிலையத்துறை அமைச்சர் திரு. இரா.காமராஜ் அவர்கள் ஆகியோர் நகல் குடும்ப அட்டைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வடகிழக்கு பருவ மழையின்போது குடும்ப அட்டைகளை இழந்தவர்களுக்கு 25.11.2015 முதல் 12.12.2015 முடிய முகாம்கள் அமைக்கப்பட்டு, சென்னை வடக்கு/தெற்கு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில், நகல் அட்டைகோரி 7,773 மனுக்கள் பெறப்பட்டு, அச்சடித்து பெறப்பட்ட 6,237 குடும்ப அட்டைகளில் 5,913 குடும்ப அட்டைகள் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 07.12.2015 அன்று சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 14.12.2015 முதல் இரண்டு வாரங்கள் சிறப்பு முகாம்கள் அமைத்து, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு ஆவணங்களை இழந்தவர்களுக்கு நகல் ஆவணங்கள் வழங்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, சென்னை வடக்கு/தெற்கு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் 62 சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, நகல் குடும்ப அட்டை வழங்கக் கோரும் மனுக்கள் பெறப்பட்டது. மேற்படி முகாம்களில் 3914 மனுக்கள் பெறப்பட்டு 1420 மனுக்கள் உரிய பரிசீலனைக்குப்பின் நகல் குடும்ப அட்டை அச்சடிக்க அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் சரிபார்க்கப்பட்டு, நகல் அட்டைகள் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்பாது, உணவுத்துறை முதன்மைச் செயலாளர் திரு. சிவதாஸ் மீனா இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. சூ. கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தி.நகர் சட்டமன்ற உறுப்பினர், திரு.V.P.கலைராஜன் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**